# சங்க அகஇலக்கியங்களில் நிலம்சார் உளவியல் பண்பாடு

***மை. அப்துல் ஹாதி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்)
அய்ய நாடார்ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

***முனைவர் பா. தமிழரசி***
ஆய்வு நெறியாளர்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அய்ய நாடார்ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி
https://doi.org/10.5281/ zenodo.14383047

***ஆய்வுச் சுருக்கம்***

*உலகில் எத்தனைஉயிரினங்கள் தோன்றினாலும் அவற்றிற்கெல்லாம் மேலானவனாகவும், அவற்றை ஆளுகை செய்பவனாகவும் தன்னைத் தகுதிப்படுத்த நினைத்து இயங்குபவன் மனிதன். அம்மனிதனின் குணாதிசயங்கள் அவன் பெற்றோர், வாழும் இடம், அவன் சுற்றம், பொருளாதார நிலை, சமூக மரியாதை, நட்பு, வாசிக்கும் நூல்கள் என்று பல்வேறு களங்கள் இணைந்து அவனுக்கான வடிவத்தைக் கொடுத்து அவனைச் சமூகத்திற்குள் இயங்கவிடுகின்றன. எத்தனை களங்கள் இருந்தாலும் அவையெல்லாம் மனம் என்னும் களத்தில் இணைந்தே செயல்பாட்டிற்கு வருகின்றன. அவற்றில் மனம் வாழிடச்சுழலோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அதனடிப்படையிலே முழுமையான வடிவம் பெறுகின்றன என்பதை ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

*ஒரு படைப்பாளன் சமுதாயத்தில் தான் கண்டவற்றைப் படைப்பாக்குகின்றான். மேலும் தான் காண விரும்பியவற்றையும், எப்படி இருந்தால் இந்த சமுதாயம் நன்றாக இருக்கும் என்ற தம்முடைய எதிர்பார்ப்பையும் படைப்புகளில் புகுத்தி நல்லதொரு சமூகத்தை உருவாக்குகின்றான். அதனால் தான் இலக்கியங்கள் காலத்தில் கண்ணாடியாகவும் காலத்தின் குரலாகவும் திகழ்கின்றன. இதன் அடிப்படையில் சங்ககால மக்களின் வாழ்வியல், பண்பாட்டுக் கூறுகள், தொழில்கள், பொருளாதாரநிலை போன்றவற்றை அக்கால இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்தறிகின்றோம். சங்ககால மக்களின் பண்புகள், வாழ்வியல் கூறுகள் ஆகியவை அவர்களின் வாழிடச் சுழலின் அடிப்படையில் அமைந்திருப்பதை அறிய முடிகிறது. இதைத் தான் உளவியலாளர்கள் ஒரு மனிதனின் பண்பையும் அவன் சார்ந்த சமூகத்தையும் அவனுடைய வாழிடச்சுழலே அதிகளவில் திர்மானிக்கின்றன என்கின்றனர். அதனடிப்படையில் மனிதனின் உள்ளம் வாழிடச்சுழலோடு தொடர்பு கொண்டுள்ள விதத்தினைச் சங்க அகப்பாடல்களின் வழி ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகின்றது.*

## நிலவியல் அறிமுகம்

*நிலவியல் என்பது ஒரு குறிப்பிட்ட பரப்புடைய நிலத்தின் கட்டமைப்பு, சுழல்கள், இயல்புகள், இயற்கைத் தாக்கம், அந்நிலம் உருவாக்கிய வரலாறு போன்றன பற்றிய ஆய்வு ஆகும். நிலவியல் பின்புலங்களை ஆராய்வதற்கு பல்வேறு துறை சார்ந்த பங்களிப்புகள் தேவையான நிலையில் இலக்கியங்களும் அதில் முதன்மைத் தேவைகளாகப் பார்க்கப்படுகின்றன. இலக்கியங்கள் என்பவை*

*மொழிசார்ந்த மக்களின் வாழ்வியல், பண்பாடு பழக்க வழக்கங்கள். நம்பிக்கைகள் போன்ற அனைத்தும் அவர்கள் எந்த நிலம் சார்ந்து வாழ்ந்து வந்தனர் என்பதை வெளிப்படுத்தும் கருவியாகப் பார்க்கப்படுகின்றன.*

*"நிலவியல் என்பது புமியின் மேற்பரப்பு அதாவது மனிதனுக்கும் அவனது சுற்றுப்புறச் சுழல்களுக்குமிடையே உள்ள தொடர்பு ஆகியவற்றினை ஆராய்ச்சியால் கிடைக்கப்படும் அறிவுக் கூறுகளில் பரந்து விரிந்த ஒன்று என்பதில் ஐயம் இல்லை. நிலவியல் என்பதை ஆங்கிலத்தில்* Geography *என்பர். இது நிலத்தின் விளக்கம் என்ற பொருளைத் தரும் கிரேக்க பூகோளச் சொற்றொடரிலிருந்து பெறப்பட்டதாகும்" (முதங்கராசு "2022" ப- 5)*

*ஒவ்வொரு தனிமனிதனின் பண்பையும், செயலையும் அவனுடைய வாழிடச் சூழல் தான் தீர்மானிக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழந்தமிழ் மாந்தர்கள் நிலவியல் அறிவுடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்களின் வாயிலாக அறியமுடிகின்றது.*

***புறநானூற்றுப் பாடலில் ஔவையார்,***
***"நாடா கொன்றோ காடா கொன்றோ***
***அவலா கொன்றோ மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவர் ஆடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம். 187)***

*என்று கூறுவதன் வாயிலாக நிலத்தின் பெருமையினையும், நிலத்தின் வழியாக வெளிப்படும் மாந்தரின் குணநலன்களையும் அறிய முடிகிறது.*

*சங்க இலக்கியம் கூறுகின்ற செய்திகள் யாவும் முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. அவற்றுள் முதற்பொருளும் கருப்பொருளும் நிலவியல் சார்ந்த தரவுகளையே விளக்கும் விதமாகவும் உரிப்பொருள் என்பது முதல், கரு பொருளடிப்படையில் நடைபெறும் அகப்புற வாழ்வு நிகழ்ச்சிகளை விளக்கும் விதமாகவும் அமைகின்றன.*

***"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே***
***நுவலுங் காலை முறைசிறந் தனவே***
***பாடலுள் பயின்றவை நாடுங் காலை"***
***(தொல்.பொருள்.அகத்.நூற்.3)***

*முதற்பொருள் என்பது நிலம், பொழுது ஆகிய இரண்டின் இயல்பால் அமைவது என்கிறார்.*

***"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்***
***இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"***
***(தொல்.பொருள்.அகத்.நூற்.4)***

*தொல்காப்பியர் திணையமைப்பில் நிலத்தையும், பொருளையும் சேர்த்து முதற்பொருள் என்கிறார். நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகவும். பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இரு வகையாகவும் பகுக்கப்பட்டுள்ளன.*

*கருப்பொருள் என்பது நிலம் மற்றும் பொழுதின் அடிப்படையிலான முதற்பொருளின் உள்ள உயிரினங்களும் பிறவும் ஆகும். "வாழும் மனிதனுக்குத் துணையாகவும் பகையாகவும் விளங்கும் இயற்கையின் கூறுகள் பல அவன் அஞ்சி வணங்கும் தெய்வம், அவன் உயிரையும் உடலையும் காக்கும் உணவு, அவன் இயற்றும் தொழில் ஆகியவற்றோடு விலங்கு, மரம், பறவை, யாழ் முதலான நிலத்தியல்போடு ஒட்டிய அனைத்தும் கருப்பொருள்" (மு. தங்கராசு "2022" ப - 4)*

*உரிப்பொருள் நிலப் பொதுவுடைமைக் கொண்டவை. ஒவ்வொரு நிலத்து மக்களின் ஒழுக்கம் "உரிப்பொருள்" ஆகிறது. மனித இனத்தின் பெருமை சேர்ப்பதும் அவர்களுக்கே உரியதுமாகிய பொருள் ஆதலினால் இஃது உரிப்பொருள். சங்க கால மாந்தர்கள் ஐவகை நிலத்திற்கு ஐந்து உரிப்பொருள்களைப் பகுத்துள்ளனர். அவ்வகையில் சங்க கால நிலவியல் அடிப்படையில் பழந்தமிழரின் வாழ்வியலும் செயல்பாடுகளும் மாறுபடுகிறது என்பதை அறியமுடிகின்றது.*

*நிலம்சார் இயற்கைச் சுழலும் உணர்வுகளும் இயற்கைச் சுழல் உயிரினங்களின் வாழ்வியல் முறைகளைத் தீர்மானிக்கின்றன. இயற்கையைத் தவிர்த்து விட்டு மனிதனின் இயல்புகளைப்*

பற்றி பேசமுடியாது. இயற்கையும் உயிரினச் செயல்பாடுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. மனிதன் செயற்கையாகச் செய்கின்ற ஒவ்வொன்றும் இயற்கையின் நகலே ஆகும். மனிதன் தான் சார்ந்த பரப்பின் இயற்கைச் சுழலைச் சார்ந்து வாழுகின்றான். அவ்வாறே சங்க காலத்தில் வாழ்ந்த சங்ககால மாந்தர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பதைச் சங்க அகப்பாடல்களின் வழியே அறிய முடிகின்றது. நிலங்கள் ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டன. ஓர்ஆண்டின் காலக்கூறு பெரும்பொழுதாகவும், ஒரு நாளின் காலக்கூறு சிறுபொழுதாகவும், இயற்கையின் காலக்கூறுகள் மழை, பனி, வெயில் என பகுக்கப்பட்டு இருந்தன. இயற்கை சார்ந்த திணைஅடிப்படையில்வாழ்வியலைஅமைத்து வாழ்ந்த மக்கள் இயற்கையின் மாற்றத்தைக் கவனித்து அதன் அடிப்படையிலான தேவைகளையும் சுழல்களையும் மையப்படுத்தி வாழ்ந்து வந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.

பழந்தமிழ் மாந்தர் இயற்கையைத் தங்களின் உறவாக எண்ணி வாழ்ந்தமையைச் சங்க அகப்பாடல்கள் புலப்படுத்துகின்றன என்பதற்குச் சான்றாக நெய்தல் தலைவி ஒருத்தி சிறுபருவத்தில் இருந்த போது புன்னைமர விதைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது தவறிய ஒரு விதை புன்னைச் செடியாய் வளர்ந்தது. அதற்கு நெய்யும் பாலும் அன்புடன் ஊற்றி மரமாக வளர்த்த காரணத்தால், தலைவியிடம் அப்புன்னை மரம் உன் தமக்கை என அறிமுகப்படுத்தினாள் தாய். தலைவியும் இளமை முதலே அதனைப் பாதுகாத்து வளர்த்து வரலானாள். தன் தமக்கையான புன்னைமரத்தின் முன் தலைவி தலைவனுடன் பேச நாணியதை,

**“விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,**
**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,**
**நெய் பெய்தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே”**

(நற். 172: 1-5)

என்ற நற்றிணைப் பாடல் விளக்குகின்றது. இதன் மூலம் சங்ககால மக்கள் இயற்கையின் மீது கொண்டிருந்த உறவினையும், அந்த இயற்கை அவர்களின் மனவுணர்வுகளைச் சார்ந்து விளங்கியது என்பதையும் அறிய முடிகின்றது.

**“சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா**
**அலங்குகுலைக் காந்தள் தீண்டி, தாது உக**
**கன்றுதாய் மருளும் குன்ற நாடன்**
**உடுக்கும் தழைதந்தனனேயாம் அஃது**
**உடுப்பின் யாய்அஞ்சுதுமே கொடுப்பின்**
**கேளுடைக் கேடுஅஞ்சுதுமே ஆயிடை**
**வாடலகொல்லோ தாமேஅவன் மலைப்**
**போருடை வருடையும் பாயாச்**
**சுருடை அடுக்கத்த கொயற்குஅருந்தழையே”**

(நற். 359)

என்ற நற்றிணைப் பாடலில் தலைவன் தழைகளைக் கொடுத்து அதனை ஆடையாக அணியச் சொல்கின்றான். அதனை உடுத்தினால் நற்றாய் அறிந்து கொள்வாள் களவு வெளிப்பட்டு விடும் என்று அஞ்சி மறுக்க நினைக்கிறாள், மறுத்து தழையாடையை உடுத்தாமல் போனால் தலைவன் வருந்துவான். தெய்வம் சுழ்ந்த மலைப் பக்கத்திலிருந்து பறித்து வந்தமையால் அத்தழையாடைவாடுதல்பிழையாகும்என்றும் கபில ர்குறிப்பிடுவதன் வாயிலாக சங்கத்தமிழ் மாந்தர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாழ்க்கையும் அதன் வழியே வரும் சிக்கல்களை எதிர்கொள்ளும் மன உணர்வும் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. இன்றளவும் தமிழர்களின் வாழ்வியலில் பிரிக்க இயலாதவையாக அஃறிணைப் பொருட்களான மரங்கள், செடி கொடிகள் போன்றவையும் ஆடு, மாடு கோழி போன்றவையும் அமைந்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. பட்டு, பருத்தி போன்ற இயற்கையோடு அமைந்த ஆடைகள் அணிவதை தொன்று தொட்டு இன்றும் அணிந்து வருகின்றார்கள். சங்க காலம் இயற்கையோடு மக்கள் இணைந்து வாழ்ந்த காலம். இயற்கையின் காலக்கூறுகளே

*உயர்திணை உயிர்களின் பண்புகளைத் தீர்மானிக்கின்றது என்பதை அறிய முடிகின்றது.*

*நிலம்சார் பழக்கவழக்கங்களும் உணர்வுகளும் நிலம் சார்ந்த மரபுகளை மனிதன் காலந்தோறும் ஏதேனும் ஒரு வகையில் சுமந்து கொண்டே வருகின்றான். அம்மரபுகள் அந்தந்த கால கட்டங்களுக்கு ஏற்புடையதாக இருந்திருக்கலாம் ஆனால் ஏனைய காலச்சுழலில் ஏற்புடையதாக இல்லாமல் இருக்கும் நிலை இருந்தாலும் மரபினைப் போற்றும் விதமாக எல்லா காலச் சுழலிலும் அந்த பழக்கவழக்கங்களைச் செய்து வருகின்றான் மனிதன். உணவு, உடை, வாழிடம், இல்லறம். விருந்தோம்பல், தொழில் முதலான அனைத்தும் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றை அப்படியே பின்பற்றும் போதோ, மாற்றும் போதோ அல்லது மாற்ற முயற்சிக்கும் போதோ பல்வேறு வகையிலான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. பழந்தமிழர்கள் தான் சார்ந்த நிலத்திற்கு ஏற்ப தமது பழக்கவழக்கங்களை அமைத்து உயரிய மாண்போடு வாழ்ந்து வந்தனர் என்பதைச் சங்க அகப்பாடல்களின் வழியாக அறிய முடிகின்றது. சங்க அகப்பாடல்களில் ஒன்றான குறுந்தொகைப் பாடல் ஒன்றில் விருந்தை எதிர்கொள்ளும் தன்மைப் பற்றிய குறிப்பு உள்ளது. அதில் இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததைப்*

***"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ"** (குறுந்.118:3)*

*என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இன்றும் கிராமங்களில் அன்றாடம் மீதமுள்ள சோற்றில் தண்ணீ ர்ஊற்றி வைக்கும் முன்பாக ஊருக்குள் கடைசி பேருந்து போய்விட்டதா எனக் கேட்பார்கள். காரணம் அதில் உறவினர் யாரும் வந்தால் உணவளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணமே ஆகும்.*

*விருந்தோம்பல் என்பது தமிழர்களின் வாழ்வியலில் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தின ர்வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு தமிழருக்கு உண்டு. இதை*

***"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்"***
*(நற். 142 : 9)*

*என்ற நற்றிணைப்பாடல் குறிப்பிடுகிறது.*

*சங்கத் தமிழ் மாந்தர்கள் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலிய பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று மூலம் நிறைவேற்றிக் கொண்டுள்ளனர். அதிக விலையுள்ள பொருள்களை மட்டுமே தேவை கருதி காசு கொடுத்து வாங்கியுள்ளனர். இப்பண்டமாற்று முறை தமிழ்நாட்டிற்குள் மட்டுமில்லாது பிறநாடுகளிலும் இருந்து வந்துள்ளது. அன்றைய தமிழகத்தின் பண்டமாற்று முறையினைச் சங்க இலக்கியங்கள் தெளிவாகப் பதிவு செய்துள்ளன.*

**பண்டமாற்று முறை**

*ஓர் இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாய் தானியத்தைப் பெற்றுக்கொண்டதைக் குறுந்தொகைச் செய்யுள் விளக்குகிறது.*

***"பாலொடு வந்து கூழொடு பெயரும் யாருடை இடையன்"** (குறுந். 221-3)*

*முசிறி என்னும் சேரநாட்டுத் துறைமுகப் பட்டினத்தில், யவனர்களின் மரக்கலங்கள் பொன்னைக் கொண்டுவந்து கொட்டிவிட்டு, அதற்கு பகரமாகக் மிளகு மூட்டைகளை ஏற்றிச் செல்வதாக அகநானூறு குறிப்பிடுகிறது.*

***"யவன ர்தந்த வினைமாண் நன்கலம்***
***பொன்னொடு வந்து கறியொடு பெயரும்***
***வளங்கெழு முசிறி"** (அகம். 149'9-11)*

*பண்டமாற்று முறை எனும் பண்பாட்டு பழக்கவழக்கம் பழந்தமிழர்களின் வாழ்வியலில் சிறப்புற்று இருந்ததை அறிய முடிகின்றது. பண்டமாற்று வழங்கிய காலத்தில் காசும் வழங்கப்பட்டது என்றும், செம்பு, வெள்ளி, பொன் முதலிய காசுகள் வழக்கத்திலிருந்தன என்பதையும் சங்க இலக்கியங்கள்*

*கூறுகின்றன. (அகம்.363 : 6 - 8, ஐங்கு. பாலை - 10)*

*காலந்தோறும் தமிழர்கள்' பிறருக்கு உதவுதல், விருந்தோம்பல் போன்ற உயிர்நேயப் பண்பாடுகள் உடையவர்களாக விளங்குகின்றார்கள். பண்டைத் தமிழர் உள்ளங்களிலும் செயல்களிலும் விருந்தோம்பல், தொழில், ஈகை, உணவு, உடை, நாகரிகப் பண்பாடு செழித்திருந்ததையும் மேலும் அவர்கள் தம் நிலம் சார்ந்த உயர் பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.*

**நிறைவுரை**

*"சங்க அகஇலக்கியங்களில் நிலம்சார் உளவியல் பண்பாடு" எனும் இவ் ஆய்வுக் கட்டுரையானது பழந்தமிழ் மாந்தர்களின் அகமன வாழ்வு நிலம் சார்ந்து எவ்வாறு அமைந்திருந்தது என்பதை விளக்குவதாக அமைகின்றது. தமிழர்களின் பண்புகள் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்ற பண்பாடுகள் யாவும் நிலம் சார்ந்து அமைவதையும், மேலும் நிலத்திற்கு நிலம் மாறுபடுவதையும் அதன் நீட்சி தொழில் நுட்பம் வளர்ந்த இக்காலத்திலும் தொடர்வதையும் விளக்குவதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.*

**துணைநின்றவை**


1. *சங்க இலக்கியத்தில் நிலவியல், தங்கராசு .மு தமிழர் மலர், பதிப்பாண்டு - 2022, சென்னை.*
2. *அகப்பொருள் விளக்கம், முனைவர் ச.திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம், பதிப்பாண்டு : 2010. திருவையாறு.*
3. *நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் உரை, டாக்டர் உ.வே.சா நூல்நிலையம், நான்காம் பதிப்பு 2017. சென்னை.*
4. *குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் உரை, டாக்டர் உ.வே.சா நூல்நிலையம், ஏழாம் பதிப்பு 2017, சென்னை.*
5. *அகநானூறு மணிமிடை பவளம், நாவலர் நாட்டார் உரைகள், தமிழ்மண் பதிப்பகம், முதற்பதிப்பு - 2007, சென்னை*
6. *அகநானூறு நித்திலக் கோவை, நாவலர் நாட்டார் உரைகள், தமிழ்மண் பதிப்பகம், முதற்பதிப்பு - 2007, சென்னை*
7. *ஐங்குநூறு மூலமும் உரையும், பொ.வே.சோமசுந்தரனார் உரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித் தாந்த நூற்பதிப்புக் க ழகம், பதிப்பாண்டு : 2009, சென்னை.*